இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 12.02.2026

# போலி விவசாயியின் பொய்கள்!

**பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு பச்சைப் பொய்களைச் சொல்வது பழனிசாமிக்கு வழக்கம். 'நானும் விவசாயிதான்' என்று சொல்லியபடியே உழவர் பெருமக்களுக்கு துரோகங்களை இழைத்ததுதான் அவரது துரோக வரலாறு ஆகும். தனது ஆட்சி காலத்தில் செய்த துரோகங்களை மக்களும் உழவர்களும் மறந்திருப்பார்கள் என்று நினைத்து இரண்டு நாட்களுக்கு முன்னால் பச்சைத் துண்டைப் போட்டுக் கொண்டு அதே பழைய பொய்களை அவிழ்த்து விட்டுள்ளார் பழனிசாமி.**

காவிரி நீர் உரிமையைத் தான் காப்பாற்றியதாகவும், தான் தொடங்கிய 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தை தி.மு.க. அரசு கைவிட்டதாகவும் பழனி சாமி சொல்லி இருக்கிறார்.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில்தான் காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு முழுநேரத் தலைவர் நியமிக்கப்பட்டார். 2018 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளாக முழுநேரத் தலைவர் நியமிக்கவே இல்லை. நியமிக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு அடம்பிடித்தது. அதனைத் தட்டிக் கேட்காமல் பழனிசாமியின் அரசு தலையாட்டிக் கொண்டுதான் இருந்தது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு 5.2.2007 அன்று வந்தது. அப்போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியே இருந்தது. இந்த இறுதித் தீர்ப்பில் தமிழகத்தின் பாசனப் பரப்பு 4,56,130 ஏக்கர் விடுபட்டு இருந்தது. இதனைக் கழக அரசு கடுமையாக எதிர்த்தது. உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினார் முதல்வர் கலைஞர். அ.தி.மு.க.வும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. காவிரி பாசன விவசாயிகளின் பாரம்பர்ய உரிமையைக் காக்க காவிரி மன்ற இறுதித் தீர்ப்பில் கூடுதலாக 60 டி.எம்.சி. நீர் கோரி 2007 ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிறப்பு முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு 2017 ஆம் ஆண்டு ஜூலை 10, செப்டம்பர் 20 ஆகிய இரண்டு நாட்களும் விசாரணை நடந்தது. இங்கு தான் பழனிசாமி அரசின் கையாலாகாத் தனம் வெளிப்பட்டது. சரியான வாதங்களை வைத்து அரசு வாதாடவில்லை.

**"தமிழக அரசின் மனுவில் என்ன சொல்லப்பட்டு இருந்ததோ அதைக் கூட நீதிமன்றத்தில் சொல்லி வாதங்களை வைக்கவில்லை. தமிழக அரசின் வழக்கறிஞர் பேசுவதும், மனுவில் உள்ளதும் வேறு வேறாக இருக்கிறதே" என்று நீதிபதி களே சொன்னார்கள். இப்படி அலட்சியமாக வழக்கை நடத்திய அரசுதான் அ.தி.மு.க. அரசு. இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு, 'காவிரி காப் பாளர்' என்ற பட்டத்தை தனக்குத் தானே கொடுத்துக் கொண்டார் பழனிசாமி.**

அவர் உண்மையான விவசாயியாக இருந்தால் வேளாண்மையைச் சிதைக்கும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரிப்பாரா? விவசாயிகள் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் போராடினார்கள். அவர்களை புரோக்கர்கள், என்றவர்தான் பழனிசாமி.

இன்னொரு பொய் என்னவென்றால், "டெல்டா மாவட்டத்து மக்கள் இயற்கைச் சீற்றத்தால் பல்வேறு சோதனைகளைச் சந்தித்த போதெல்லாம் நேசக்கரம் நீட்டிய ஒரே இயக்கம் அ.தி.மு.க." என்றும் சொல்லி இருக்கிறார் பழனிசாமி.

2018 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதியன்று இணையத்தில் ஒரு வீடியோ வைரல் ஆனது. அதனை பழனிசாமி எடுத்து பார்க்க வேண்டும். சுவர் ஏறி தப்பி ஓடினார் பழனிசாமியின் ஆட்சியில் அமைச்சராக இருந்த ஓ.எஸ்.மணியம்.

**புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதிகளைப் பார்வையிட வருகை தரும் அ.தி.மு.க. அமைச்சர்கள் அனைவரையும் மக்கள் கோபமாக எதிர்த்தார்கள். வேதாரண்யம் வேட்டைக் காரனிப்பு பகுதிக்கு அ.தி.மு.க. அமைச்சர் ஓ.எஸ். மணியம் வந்தபோது, மக்கள் அடிக்க வந்தார்கள். சுவர் ஏறிக் குதித்து ஓ.எஸ்.மணியம் தப்பி ஓடினார். இவர் தப்பி ஓடும் போது, பின்னால் ஓடியவாறு ஒருவர் தனது செல்போனில் வீடியோ எடுத்தார். அமைச்சர் ஓ.எஸ்.மணியத்தை அந்த நபர், துரத்தியபடியே போய் வீடியோ எடுத்தார். தனது காரை விட்டுவிட்டு இரு சக்கர வாகனத்தில் ஓ.எஸ்.மணியன் ஓடியதை அன்று தமிழ்நாடே பார்த்தது. 'நேசக்கரம் நீட்டியதாக' இப்போது பேட்டி தரும் பழனிசாமி, அந்தக் காட்சிகளை மீண்டும் ஒரு முறை பார்க்கட்டும்.**

நீலகிரி மாவட்டமே இயற்கை பேரிடரால் பெரும் பாதிப்பு ஏற்பட்டபோது ஒரே ஒரு அமைச்சரை மட்டும் அவசர அவசரமாக அனுப்பி வைத்தார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. அவரும் வந்ததும் தெரியாமல் போனதும் தெரியாமல் வந்து போனார். முதலமைச்சர் பழனிசாமி ஏன் வர வில்லை என்று தி.மு.க. கேள்வி எழுப்பியது. அதன்பிறகு ஒரு நாள் வந்தார் பழனிசாமி . அதுவும் ஹெலிகாப்டரில் வந்தார். சில இடங்களில் சில மணி நேரம் பார்த்துவிட்டுப் போய்விட்டார். பழனிசாமியின் நேசக் குணம், அவ்வளவுதான்.

**விவசாயிகளுக்கான பி.எம். கிசான் திட்டத்தில் ஊழல் நடந்தது அ.தி.மு.க. ஆட்சியில். கேட்டால் ஒப்பந்த ஊழியர்கள் செய்து விட்டார்கள் என்று திசை திருப்பினார்கள். விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிதியை "போலி விவசாயி களுக்கு" கொடுத்தது பழனிசாமி.**

**நெல் கொள்முதல் நிலையங்களில் ஊழல் நடந்ததாக உயர்நீதிமன்றமே கண்டித்தது. விவசாயிகளுக்கான நீர்ப்பாசன கால்வாய்களைத் தூர் வாருவதில் ஊழல். விவசாயிகளுக்கான பி.எம். கிசான் திட்டத்தில் ஊழல். விவசாயிகளின் நீர் ஆதாரத்திற்கான குடிமராமத்து பணிகளிலும் ஊழல். இது தான் போலி விவசாயி பழனிசாமியின் ஆட்சியாகும்.**

'விவசாயிகள் கடனை ரத்து செய்ய மாட்டேன்" என்று சொல்லி உச்சநீதி மன்றம் வரை போனவர்தான் பழனிசாமி. மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிராக போராடிய விவசாயிகளை ஒடுக்கியவர்தான் இந்த பழனிசாமி.வேளாண் மண்டலம் என்பதை போலியாக அறிவித்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஹைட்ரோகார்பன் திட்டங்கள் செயல்படும் என்ற சதி செய்தவர் தான் இந்த பழனிசாமி.

**இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து சாயம் போன பழைய துண்டு போட்டுக் கொண்டு அதே பழைய பொய்களை அவிழ்க்கிறார் பழனிசாமி.**

●●




நேற்று முன்தினம் (10.02.2026) சென்னை, மேடவாக்கம், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி 50வது ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில், பொன் விழா ஆண்டு சிறப்பு மலரினை அமைச்சர்கள் மா. சுப்ரமணியன், முனைவர் கோவி. செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வெளியிட்டனர். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் கே.என் பாஷா, கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் எம்.ஜி. தாவூத் மியாகான், முதல்வர் முனைவர் மோ.அம்துல் தவாப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மையின மக்களுக்கு

# என்றென்றும் பாதுகாப்பு அரண் கழக அரசு!

### காயிதே மில்லத் கல்லூரி பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில் – அமைச்சர் கோவி. செழியன் பெருமிதம்!

சென்னை, பிப்.12-

சிறுபான்மையின மக்களுக்கு என்றென்றும் பாதுகாப்பு அரணாக இவ்வரசு உள்ளது - காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி 50-வது ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சென்னை, மேடவாக்கம், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி 50-வது ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தியோடு தொடங்கப்பட்டு, பொன்விழா ஆண்டு சிறப்பு மலரினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (10.02.2026) வெளியிட்டனர்.

இவ்விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

சிறுபான்மையின மக்களுக்கு என்றென்றும் பாதுகாப்பு அரணாக இவ்வரசு செயல்படுகிறது. 1989-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல ஆணையத்தை அமைத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், மேலும், 1990-ஆம் ஆண்டு அப்துல் ஜாபர் தலைமையில் சிறுபான்மையினர் நலக்குழு, 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 2007-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககம், 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், இஸ்லாமிய சமுதாய உலமாக்களுக்கும், பள்ளிவாசலில் பணிபுரியம் மோதினார்களுக்கும் இலவச சைக்கிள் ஆகிய திட்டங்களை செயல்படுத்தினார். அவரின் வழித்தோன்றலாக, கர்நாடகாவில் இஸ்லாமியர் அணியும் உடை விவகாரத்தில் கலவரமாகியபோது, தன்னிகரில்லாத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் இஸ்லாமியர் அணியும் ஹிஜாபை அனுமதித்தது. மேலும், சிறுபான்மையினர் விடுதி மாணவ மாணவியர்க்கு சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு,சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் புதிய பணியிடங்களுடன் அலுவலகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக அதிக கடன்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறுபான்மையின மக்களுக்காக முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

மேடவாக்கம், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி, இன்று தனது 50-ஆம் ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சி சிறப்பாகக் கொண்டாடுகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிறுவனத்தின் விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். தமிழ் மொழிக்கு ஒப்பற்ற சேவையாற்றிய காயிதே மில்லத் அல்ஹாஜ் எம். முகமது இஸ்மாயில் சாஹிப் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையின் விளைவாக உயர்கல்வி அனைவருக்கும் எட்ட வேண்டும் என்ற இலக்குடன் இந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு அரசியலுக்கு அப்பாற்பட்டு பலர் ஒன்றிணைந்து காயிதே மில்லத் மற்றும் சமூக அறக்கட்டளையை உருவாக்கி 1975-ம் ஆண்டு மீனம்பாக்கத்தில் வாடகை கட்டிடத்தில் 5 பாடப்பிரிவுகளுடன் 200 மாணவர்களைக்கொண்டு காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி தொடங்கப்பட்டது. இக்கல்லூரியினை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்ட அரசு உதவிபெறும் இக்கல்லூரி, தற்போது 7 வகையான பாடப்பிரிவுகளுடன் இருபாலர் கல்லூரியாக 2,000 மாணாக்கர்களுடன் சிறப்புடன் செயல்பட்டு, தற்போது பொன்விழாவினை நிறைவு செய்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுறவு, உருது, அரபிக் பாடப்பிரிவுகளில் இக்கல்லூரி மாணவர்கள் பல்கலைக்கழக தேர்வில் முதலிடம் பெற்று, பட்டம் பெறுவது பெருமைக்குரியது. குறைந்த கட்டணம், உயர்ந்த கல்வித் தரம் என்ற கொள்கையுடன், சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அரசு உதவி பெறும் சிறுபான்மைக் கல்வி நிறுவனமாக, கடந்த 50 ஆண்டுகளாக சமூக முன்னேற்றத்திற்கான கல்விச் சேவையை சிறப்புடன் தொடர்ந்து வழங்கி வருகிறது.

இக்கல்லூரியில் பெண்கள் தடையின்றி பயில முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட "புதுமைப் பெண்" திட்டத்தில் 618 மாணவிகளும், "தமிழ்ப்புதல்வன்" திட்டத்தில் 595 மாணவர்களும், "நான் முதல்வன்" திட்டத்தில் 1,400 மாணாக்கர்களும், கடந்த மாதம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "உலகம் உங்கள் கையில்" மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 485 மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர். மாணாக்கர்கள் இத்திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி, இந்தக் கல்லூரியின் மாணவர்கள் உலகத் தரத்தில் போட்டியிடக்கூடிய திறன் பெற்ற இளைஞர்களாக உருவாக வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு.

பொன்விழா கொண்டாடும் இந்தச் சிறப்பான தருணத்தில், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரியின் நிர்வாகத்திற்கும், முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் கே.என் பாஷா, கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் எம்.ஜி. தாவூத் மியாகான், OMEIAT தலைவர், ஜனாப் முஹம்மத் அஷ்ரப், South India Shelters Pvt. Ltd., தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், Chennai CREDAI, தலைவர் ஜனாப் முஹம்மத் அலி, சிங்கப்பூர், ராயல் கிங்ஸ் குரூப், தலைவர், ஜனாப் சிராஜுத்தீன், கல்லூரி முதல்வர் முனைவர் மோ.அம்துல் தவாப், காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை இணைச் செயலாளர் ஜனாப். ஏ. ஷாஹுல் ஹமீத் மற்றும் பேராசிரியர்கள், மாணாக்கர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## இதுவரை ரூ.6 கோடியே 41 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 41 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-02-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | க.கதிர்வேல், அருள்தாஸ்புரம், தத்தனேரி, மதுரை 625002. | 25,000/–– |
| 2. | திருமதி அ.சரஸ்வதி, சின்னமனூர், உத்தமபாளையம், தேனி மாவட்டம். | 25,000/– |
| 3. | திருமதி ஒ. தமிழ்செல்வி, வார்டு–2, மடப்பாறை, திண்டுக்கல் மாவட்டம். | 25,000/– |
| 4. | கணேசன் (எ) கணபதி, லாந்தை, புத்தேந்தல் அஞ்சல், இராமநாதபுரம் | 25,000/– |
| 5. | மா.முத்துச்சாமி, பெரியபுளியம்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் | 25,000/– |
| 6. | இரா. பேச்சிமுத்து, மேலப்பாவூர், கீழப்பாவூர், தென்காசி மாவட்டம்.. | 25,000/– |
| 7. | எச்.சாகுல்ஹமீது, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் | 25,000/– |
| 8. | எம்.சாகுல்ஹமீது, புதுக்கடை தெரு, மணாளக்குறிச்சி, கன்னியாகுமரி | 25,000/– |
| | மொத்தம் | ரூ.2,00,000/- |